# The MORNING STAR

உதய தாரகை

Registered as a Newspaper | (Established 1841) | Published Every Friday

Vol. 128 | JAFFNA, FRIDAY, 24TH MAY, 1968 | No. 19.


RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE


**Rates**

*Subscriptions :*

- Inland Rs. 15·00 per year
- Foreign Rs. 20·00 „ „
- Single copy 40 cts. (including postage)

*Advertisement :* On application

*In Memoriam :* Rs. 12·50 per insertion (within 4 inches)

*Order Nisi :* Rs. 15·00 for two insertions (within 6 inches)



**Notice**

*Please Address :*

(1) All Editorial matter (excluding news) for the English pages) to : The Editor, The *Morning Star*, Vaddukoddai.

(2) All news to the News Editor Vaddukoddai.

(3) All Editorial matter for the Tamil pages to : The Tamil Editor, The *Morning Star*, Parsonage, Alaveddy

(4) All Business correspondence *re* Advertisements and Subscriptions and all remittances to :

The Manager, The *Morning Star* — A. Kadirgamar, Esq. College Lane, Vaddukoddai.


## TO ALL OUR SUBSCRIBERS

You have been informed individually about arrears due up to the end of the year 1967. Please check with me if you have any doubts.

1968 subscriptions of Rs. 15/- are payable now. Foreign subscribers pay Rs. 20/-. Please respond favourably.

Manager

18 — 21

## Calendar of Events

**May 28 :**
Service of Thanksgiving for the late Mrs. E. R Sabapathipillai at the Chavakachcheri Church at 5·30 p. m.

**June 1 — 3 :**
Whitsun Festival at the Christa Seva Ashram. Leader: The Rt. Rev. I. R. H. Gnanadasan, Bishop of the Kanyakumari Diocese, C. S. I.

**June 9 — 17 :**
Children's Week of the J. D., C. S. I.

**June 18 :**
Children's Rally (J. D., C. S. I.) at the Old Park, Jaffna.

## PRIME MINISTER'S MESSAGE TO THE JAFFNA CIVIC - CUM - HEALTH WEEK

Colombo, 17th May, 1968.

I am glad to learn that the Jaffna Municipality is launching a Civic cum Health Week from 27th May to 2nd June, 1968, to focus attention on the civic responsibilities of the citizen.

This is a very worthwhile endeavour and will undoubtedly have beneficial results.

I wish the Jaffna Municipality all success in this effort.

(*Sgd.*) DUDLEY SENANAYAKE,
Prime Minister.

## CHILDREN'S WEEK

The annual Children's Week of the Jaffna Diocese of the Church of South India will be from the 9th to the 17th of June. The theme for the Week is: "Bear ye one another's burdens". Special Children's Services will be held in all the churches on the Children's Sunday, the 9th of June. The Religious Education Board of the Diocese, which is in charge of organising the Week, suggests that local Rallies of children be held in the various churches on Monday the 10th — also that a Sunday Schools Parent-Teacher meeting be held on Thursday, the 13th or on any other day, according to convenience. At this meeting the following subjects are recommended for consideration: (a) The role of the Sunday School in the life of the Church and of the Home; (b) The various problems confronted by the Sunday Schools now — irregularity in attendance, duties of parents with regard to the Sunday School, etc. (c) Any other points or suggestions from parents.

The activities of the Week will be wound up with a Children's Rally to be held at the Old Park, Jaffna, on Monday, the 17th. It will begin at 8·30 a. m. and end at 4·45 p. m.

## MALAYSIAN CRICKETER'S DEBT TO A CEYLONESE

The Captain of the Malaysian-Ceylonese Cricket Association XI that visited Ceylon recently was Mr. Gurucharan Singh, who has been called "Malaysia's most outstanding cricketer." In an article appearing in *the Ceylon Daily News* by Wrong 'Un, which narrated an interview with him, Mr. Singh is reported to have said he was happy to associate Ceylon with his Cricket. He said: "If not for a Ceylonese gentleman I would never have been a cricketer." The gentleman he referred to is Mr. William Dudley, who was on the staff of the Methodist Boys' School, Kuala Lumpur. He gave Mr. Singh his first instructions of the game. Mr. Dudley is the father of Mr. L. J. D. Mahilrajan, of the staff of Jaffna College, Vaddukoddai, and is spending his retired life in Kuala Lumpur.

## SERVICE OF THANKSGIVING

A Service of Thanksgiving in memory of Mr. Victor Ariyanayagam Paul, Proctor, was held at the C. S. I. Church, Araly, last Monday, the 20th inst., at 4·30 p. m. It was led by the Rev. L. N. Hitchcock. The Bible Lesson was read by Miss Dawn Navaratnam, a grand-daughter of the deceased, and the Rev. N. Kathiravelu led the Litany. The sermon was preached by the Rev. L. N. Hitchcock and the Rev. J. M. Singanayagam paid a tribute to the life and work of the late Mr. Paul. The Rev. D. C. Ratnasingham led the congregation in prayer. The service ended with benediction by the Rev. Mr. Hitchcock.

## NEW PROFESSOR OF GEOGRAPHY, UNIVERSITY OF CEYLON.

Dr. George Thambyahpillay has been appointed to the Chair of Geography at the University of Ceylon, Peradeniya. Professor Thambyahpillay had his education at Jaffna College, Vaddukoddai, and was on its staff for a short period, when in 1919 he was appointed to lecture in the University of Ceylon on his graduating with honours in Geography. Subsequently he had earned two research degrees. In 1942 he was awarded the Master's degree while he was on a Fulbright - Smith - Mundt Scholarship attached to the University of California, U. S. A. Later the University of Cambridge awarded him the Ph. D. degree for his researches into Tropical Climatology.

Prof. Thambyahpillay who has lectured and written numerous research papers in the field of tropical meteorology and climatology, was honoured by being elected to the Chairmanship of two Symposia "Monsoon Meteorology" and "Regional Climatology" during the XIth sessions of the Pacific Science Congress which met in August 1966. Prof. Thambyahpillay also was elected to a U. N. E. S. C. O. Consultant position in 1965 and attended the UNESCO Experts' meeting which was held in the University of Oxford, in Nov. 1965. A few months ago he was at the International Conference on 'Land Reforms, conducted by the Lincoln Foundation of the University of Hartford (USA).

Prof. Thambyahpillay, who is a lay-preacher of the Kandy Methodist Church, was Ceylon's participant in the WSCF Seminar on "The University Man in Modernising Asia" held in Japan in 1964. He is a son of the late Mr. E. R. Thambyahpillay (retired Post Master) and of the late Mrs. Thambyahpillay of Chapel Street, Jaffna, and a son-in-law of the late Mr. S. J. Gunasegaram and Mrs. Gunasegaram of Kopay.

At present he is on an invitation to lecture in the Australian National University (Canberra) and the University of California (U. S. A.)

## OBITUARY

The death occurred suddenly due to a heart attack last Friday noon of Mr. Victor (Rajan) Sellathamby at his residence in Colpetty. He was 47 years of age at the time of his death and was apparently in normal health. He was a son of the late Mr. V. C. Sellathamby, retired Office Assistant, Trincomalee, and Mrs. A. R. Sellathamby, of Government Flats, Deal Place, Colpetty. The funeral took place the next afternoon, when the service at the home was conducted by the Rev. S. W. Fernando, assisted by the Rev. J. R. Ratnanayagam. The remains were then removed to the General Cemetery, Kanatte, where a short service was held at the Anglican Chapel by the Rev. S. W. Fernando, assisted by the Rev. A. J. Selvaratnam. The committal rites were performed by the Rev. S. W. Fernando, assisted by the Revds. A. J. Selvaratnam and T. B. Daniel.

The deceased leaves behind, beside his wife Nalini (a daughter of Mr. and Mrs. Arthur Jeyasinghe) and his mother, a son Virendra, three sisters - Mrs. Mabil Veerasingham, Mrs. Mani Mithapala, and Miss Monica Suguna Sellathamby, a brother John (Bobby), and a large circle of friends and relatives to mourn his untimely death.

## NEW MEDICAL SUPERINTENDENT OF INUVIL INSTALLED

A Service of Installation was held for Dr. J. Lakshman Amarasingham, M. B. B. S. (Cey.), F. R. C. S. (Edin.), M. R. C. O. G. (Gt. Britain) at the McLeod Hospital Chapel on Saturday, the 18th inst., at 5 p. m. Dr. Amarasingham has been appointed Obstetrician, Gynaecologist and Medical Superintendent of McLeod Hopital, Inuvil. The Rev. K. S. Jeyasingam, Secretary of the Jaffna Diocese, C. S. I., conducted the Service and preached the Sermon on the text. "I am the Lord that healeth." Ex. 15 : 26. Dr. Mrs. G. Selvadurai read the Lesson and a special song entitled "Christ is the Answer" was sung by Miss V. Arulanantham and Miss H. Rajah of the Uduvil Girls' College.

A Social followed where Dr. and Mrs. Amarasingham were introduced to the members of the Staff, the Medical Board and the Executive Committee of the J. D., C. S. I. After the Social a meeting welcoming them was held in the O. P. D. Hall. Dr. Amarasingham was garlanded by Mr. J. M. Rajaratnam and Mrs. Amarasingam was given a bouquet by Miss Selvadurai.

The Rev. K. S. Jeyasingam presided and in his speech welcoming Dr. and Mrs. Amarasingham on behalf of the Diocese mentioned that the Diocese was happy and proud to have such a devoted and efficient Doctor serving the Diocese. He referred to his late father, Mr. J. C. Amarasingham, whose contribution to the Diocese and the community was very great and would be remembered always with gratitude.

Mr. R. C. S. Cooke, the Chairman of the Medical Board, in welcoming him referred to the sacrifice and devotion shown by the Missionaries in the past and said that Dr. Amarasingham had joined the Medical Service of the Diocese with great sacrifice and devotion. He appealed to all the members of the staff to give their wholehearted co-operation to him.

Mr. K. A Sellian, the ex-Chairman of the Medical Board, mentioned that the Diocese and the community in Jaffna were fortunate in having the services of such an eminent obstetrician and gynacologist. His experience, his devotion and his good nature would be a great asset and it was hoped that many would avail themselves of his services.

Dr. Amarasingham in his reply said how happy he was that it was possible for him to serve his own community after 15 years of service outside Jaffna. He said that his late father had told him, when he passed out of the Medical College, that he should work in the hospitals of the Diocese. He was sure that if he had lived now, he would have been very happy about the step he had taken. He thanked the Diocese for the opportunity given to him and he assured them of his best and faithful service.

The function came to a close with Prayer and Benediction by the Rev. K. S. Jeyasingam.

## REV. (Miss) LEILA ANDERSON

The Rev. Miss Leila Anderson visited Jaffna briefly May 21 — 24. She was returning to the U. S. A. via a seven month trip from the Philippines, where she had been a U. C. B. W. M. missionary for three years.

For 32 years she had worked for the Home Mission Board. Included were eight years in a Junior College for the "poor whites" of the Ozak Mountains; six years with the Sioux Indians of S. Dakota; six years as a "Pilgrim Circuit Rider," making two circuits of three years each in a station wagon with limited equipment of a store, icebox, plants, and files. During these latter years she analysed the needs within their cultural setting of Southern Negroes, Southern Whites, the Dakota Indians, and reported her findings to the Educational Division of the Board, to guide them in making Christian Education curricula.

In 1960 Harpers brought out "Pilgrim Circuit Rider," a biography of her adventures; and the Library of Congress, Washington, D. C. had it put on records for inclusion in their Library for the Blind. It is now, revised, to be published in English in the Philippines, in a paper back.

Early in her career Miss Anderson went to Chicago University and in three years earned her M. A. degree, her B. D., and was ordained.

From [illegible] she traveled in and worked from a caravan. Her [illegible] was [illegible] rural white people of West Florida and Alabama, with whom she made little progress; (b) the Dakota Indians, who were more responsive; and (c) the Negroes of Virginia and North Carolina, both rural and urban, where she found her richest rewards, especially among the younger folk. During this period she made *annual* visits to 126 Churches.

Her assessment of this five years' study was sent to the heads of departments of the Board for Home Missions as the raw material from which they could draw enlightenment and conclusions.

Finally Miss Anderson was invited to the Philippines as a leader in Christian Education — *with her trucks* — for 3 years. She lived in her caravan had "area institutes" of 3 — 6 days, trained S. S. teachers, and once-a-week — public school teachers.

All over the world, under the World Council of Churches Committee on Christian Education, curricula for Protestant classes are being or have been devised. They are started in New Zealand and Australia, Hong-Kong, Indonesia, the Philippines; are contemplating the work in the South Sea Islands; and have completed the project in Africa. The J. D. C. S. I. uses the Indian S. S. Union texts.

Miss Anderson stayed with the Lockwoods, where she met the Jaffna College administration — and the Vaddukoddai Church religious workers. She visited the Women's Centre and the Murusumottai Clinic, called in at Tellippalai (Richard's grave), Pandateruppu (John Scudders' plaque), Uduvil. She also preached at the Ascension Day Service at the Cathedral Church, Vaddukoddai, last evening. Then she was off to Madurai, the Ashram in Kodai, Bombay, and Europe. In 1968 — 1969 she will be speaking widely for the U. C. B. W. M. in the United States.

## U. C. B. W. M. MISSIONARIES

Mr. and Mrs. C. B. Bavinck and their three children are in Vaddukoddai, after the Kodai holiday. The children return in mid-June to the opening of a new school year.

Mr. and Mrs. Glenn Yocum and the Elson Lockwoods returned on the same day as the Bavincks, May 19.

The Yocums, who arrived in Ceylon November 7, were happy to see that their "unaccompanied luggage" had arrived, at last. Since they plan to leave August 5, to return to Union Seminary, N. Y. C., their enjoyment of it will be brief.

In a letter of 8th May, 1968, Mrs. Oliver Black writes: "We were in Washington three days last week, visiting our daughter Deborah, and we heard there about the preparations being made for the Gilburgs' departure for Ceylon. Deborah says they are very strong persons, completely committed to the work of the Christian Church. Very soon now they are leaving for the University of Michigan to do further study for their expected work in Jaffna.

"A Service of Recognition was held for them on April 28, at the Westmoreland Church, where he has been assistant pastor. Telfer Mook was present and spoke ......

"This past Friday in Washington we made a call at the Ceylon Embassy to pay our respects, and to convey our personal pleasure at our own visit in Ceylon. We spoke of the warm welcome we received in Colombo as well as in Jaffna, and we, in our turn, offered to any Ceylon visitors here any kindness or reciprocity that might be welcomed. We were delighted to discover some mutual friends when we talked with Mr. John Gooneratne, Second Secretary, in charge of all Ceylon Cultural Relations.

"We have been enjoying the most beautiful spring we have ever known in New England".

(Alan Gilburg who is coming to Jaffna College with his wife, is 6' 4" tall and weighs 225 lbs.)

## PROMOTION

Mr. S. A. Balaratnam, Electrical Foreman, Chunnakam, who was successful in the recent Electrical Engineers Examination conducted by the Electrical Department, has been promoted by the Public Service Commission as an Engineer. He is an Old Boy of Jaffna College and is presently the Secretary of the Jaffna College Alumni Association.

[illegible] son of Mr. and Mrs. J. N. Arulampalam of Araly and [illegible] Mrs. R. Ratnam of Uduvil.

*Youth Column*

My Dear Youngsters,

I hope my last letter to you has made you think that life would be good if we learn to enjoy our tasks and duties. If we want to do well in life later, we must work towards it now, with perseverance, diligence, and, above all, accept the discipline required.

In life there are a lot of things we do not have control of — our birth, our environment, and our circumstances. There is, however, one very important factor that we can control and that is ourselves. If we are to achieve the full dignity of manhood, whatever our circumstances, whatever our handicaps, we can come through triumphantly if we learn the art of self-discipline in our obedience to God. As children your parents, teachers, and school Principals have a responsibility to discipline you, but soon you will be on your own — free of these outside restraining influences.

As Christian youngsters you must realize that you are each a temple of the living God, that in you and through you the Holy Spirit must work often without your being aware that it is working in you.

Let us take an incident that you might have to face. In the papers recently there was a report about many school boys visiting toddy taverns. At the onset one or two boys challenge the new ones to come out and have 'some fun'. Of course, the innocent ones do not know what type of fun it would be and then to their surprise discover that it is not all clean and soon regret their part in it. Many do not have the courage to tell this to their friends because they may lose their popularity or become a laughing stock. Suppose you too had been an innocent person on that first trip, how would you as a Christian have faced the situation? As a healthy, intelligent, growing boy it is natural to want to know all that is happening around you and what people do to entertain themselves. But in that situation I hope you have the wisdom to see that you are beginning to abuse not only your body — but also to deceive your mind if you do not have the courage to say 'No, this is not for me'! Once you have done this, you'll be surprised how many others felt exactly like you but did not have the courage to say 'No', I hope all of you Christian boys and girls will learn to have courage to say 'No' to the wrong-things constantly happening around you. The difference between you and the other youngsters around you (those who are carried away with drinks and drugs, become eccentric Flower children, Hippies or Psychodelics) is that you know where you are going, you know your goal and your standards but these others are, I consider, less privileged than you as they are searching for happiness in the wrong places and will never find it there.

So be grateful to your heritage and be a blessing to all who come in contact with you. The highest type of heroism is not the nerve of the warrior facing the foe but the courage to face the daily issues of life opposing wrong and upholding right.

With sincere good wishes,

Yours sincerely,
PETER RABBIT.

C/o. The Editor,
The Morning Star,
Vaddukoddai.

## FROM FAR AND NEAR

### U. S. URGES DECISIVE ACTION ON NUCLEAR PACT

"The moment has arrived for decisive action on the proposed treaty to halt the spread of nuclear weapons and History will have every reason to judge us harshly if we miss this opportunity to create a moral stable, secure, and peaceful world order," the U. S. representative, Ambassador Arthur J. Goldberg, told the U. N. General Assembly's Political Committee recently. "This complete and carefully balanced text embodies the widest area of agreement that we believe is possible," he stressed. "We are convinced that the treaty will be effective and will accomplish its purpose — if we act in time." He cautioned, however, that if nations delay in the achievement of a practical treaty, while prolonging the quest for a more perfect text, they may find their efforts futile and wasted.

Although U. N. approval is not required, 26 nations have sponsored a draft resolution which would have the Assembly endorse the draft treaty text and encourage its widest possible acceptance.

The U. S. representative said that the Security Council resolution proposed by the United States, United Kingdom and Soviet Union "introduces a powerful element of deterrence against nuclear aggression or the threat of such aggression against non-nuclear states."

He pointed out that those three nuclear powers have committed themselves to declarations of action as permanent members of the Security Council, through that body to counter such aggression.

Of the peaceful benefits of nuclear energy, Ambassador Goldberg stressed that the treaty does not forbid anyone to engage in research and development for peaceful applications of nuclear explosions. Only the production or acquisition of the explosive device itself is precluded, he noted. Furthermore, the nuclear powers would be obligated to make nuclear explosions for peaceful purposes available to treaty signatories at a cost which excludes any charge for research and development he pointed out.

— *U. S. I. S.*

**A SERVICE OF THANKSGIVING**

FOR THE LIFE

of the late

**Elizabeth Rasammah Sabapathypillai**

will be held on

*Tuesday, May 28th, 1968, at 5 - 30 p. m.*

*at the C. S. I. Church, Chavakachcheri.*

The presence of friends and relatives will be appreciated.

"Primrose Cot.,"
Chavakachcheri.

19

IN MEMORIAM

IN AFFECTIONATE MEMORY of

**KANDIAH PETER MUTTIAH**

*Born : 31st August, 1914.*

*Called to Rest : 26th May, 1964.*

Precious in the sight of the Lord, Is the death of his saints.

Remembered by his loved ones.

11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிதோறும் வெளிவருவது

# உதயதாரகை

கிறிஸ்தவ வார இதழ்] Estd. 1841 [UTHAYATHARAKAI

மலர் 128] 24 — 5 — 1968 இதழ் 19

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்த ஜனத்துக்கும் இழிவாம்."

## வாழ்க மணமக்கள்

### மனோகரன் — ஈஸ்வரி

சென்ற புதன் (22-5-68) மாலை ஏழாலை வடக்கு தெ. இ. ச. தேவாலயத்தில் மறைத்திருவாளர்கள் S. S. அருளம்பலம், S. T. ஆசீர்வாதம் ஆகியோரால் ஒரு பரிசுத்த விவாகம் நிறைவேற்றப்பட்டது. மறைத்திரு ஆசீர்வாதம் மணமக்களுக்கு அருளுரை வழங்கினர்.

மணமகன்: திரு. பீற்றர் மனோகரன் (காரைநகர் மேற்கு திரு. க. மனுவேற்பிள்ளையின் மகனும், மன்னார் ஐக்கிய சங்கங்களின் சமாசச் செயலகச் செயலாளனுமாவர்.)

மணமகள்: திருவளர் செல்வி ஈஸ்வரி இராசதுரை. (கட்டுவன் தெற்கு இளைப்பாறிய ஆசிரியர் திரு. இ. இராசதுரை, J. P. இன் மகளும், பண்டத்தரிப்பு மகளிர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியையுமாவர்.)

மணமகளில்லத்தில் உபசாரணை நடைபெற்றது.

## மறுமைப் பிரவேசம்

### திருவாட்டி அலிஸ் பூரணம் சோமசுந்தரம்

காரைநகர்ச் சபையைச் சேர்ந்தவரும், காலஞ்சென்ற திரு. H. S சோமசுந்தரம், ஆசிரியர் அவர்களின் மனைவியுமான திருவாட்டி அலிஸ் பூரணம் சோமசுந்தரம் 17-5-68, வெள்ளிக்கிழமை மறுமைக்குள் பிரவேசித்தனர். மறுநாள் மாலை மறைத்திருவாளர்கள் N. W, G. சுகுணராசா, G. M. கனகரத்தினம், S. P. விஜயரத்தினம் ஆகியோரால் நடத்தப்பட்ட சேமாராதனையில் மறைத்திரு I. T. இயேசுசகாயம் தேவாரமோதினர். மறைத்திரு L. N. ஹிச்கொக் அருளுரை வழங்கி, அம்மையாரின் அமைதி, தாழ்மை, சபைக்கரிசனை, குடும்ப உணர்வு, நிறை வாழ்வு பற்றிக் குறிப்பிட்டனர்.

காரைநகர் சேமக்காலையில் மறைத்திருவாளர்கள் J. M. சிங்கநாயகம், N. W. G. சுகுணராசா ஆகியோரால் நல்லடக்கம் செய்யப்பட்டனர்.

இவரது பிரிவால் துயருறும் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் சுற்றமித்திரருக்குத் தேவ தேற்றரவு கிட்டுவதாக.

○

### திரு. ஏ, டி, நமசிவாயம்

புங்குடுதீவுச் சபையைச் சேர்ந்த திரு. ஏ. டி. நமசிவாயம் (ஆசிரியர்) 14-5-68 அன்று மறுமைக்குள் பிரவேசித்தனர். இவர் திரு. ஏ. சரவணமுத்து, திரு. ஏ. ஜே. தம்பிஐயா, காலஞ்சென்ற திரு. ஏ. சின்னத்துரை, காலஞ்சென்ற ஏ. அருணாசலம், திருமதி ரி. கணபதிப்பிள்ளை, திருமதி. ஏ. சபாபதிப்பிள்ளை, திருமதி ஆர். சிவலிங்கம், திருமதி டபிள்யூ கே. தேவதாசன், திருமதி எஸ். நாகலிங்கம் ஆகியோரின் சகோதரனுமாவர். மறுநாள் (15-5-68) மாலை 4-30 மணிக்கு புங்குடுதீவிலுள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் திரு. டபிள்யூ கே. தேவதாசன் அவர்களால் சேமாராதனை நடத்தப்பட்டது. புங்குடுதீவிலுள்ள சேமக்காலையில் மறைத்திரு. டி. சி. இரத்தினசிங்கம், திரு. டபிள்யூ. கே. தேவதாசன் ஆகியோரால் நல்லடக்கஞ் செய்யப்பட்டார்

இவரது பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், சகோதரர்கள், சுற்றமித்திரர் அனைவரையும் கடவுள் தாமே தேற்றுவாராக.

## ஆட்கள்

### Dr. J. L. அமரசிங்கம்
(F. R. C. S., M. R. C. Og.)

கடந்த 18 ஆம் திகதி மக்லியொட் வைத்தியசாலை அதிகாரியாக டக்டர் ஜே. எல். அமரசிங்கம் நியமனம் பெற்றார், அன்று மாலை 5 மணிக்கு இணுவில் ஆலயத்தில் மறைத்திரு. கே. எஸ். ஜெயசிங்கம் அவர்களால் இவரது நியமனப் பிரதிஷ்டை ஆராதனை நடத்தப் பட்டது. மறைத்திரு ஜெயசிங்கம் தமது அருளுரையின் போது டக்டர் தமது இளம் வயதில் அரசாங்க சேவையை விடுத்து மிஷன் தாபனத்தில் பணிபுரிய விரும்பியதைப் பாராட்டினர்.

டக்டர் ஜெபலட்சுமணன் அவர்கள் காலஞ்சென்ற பேராசிரியர் திரு. ஜே. சி. அமரசிங்கம் அவர்களின் மகன். இலங்கை வைத்திய கல்லூரியில் M. B., B. S. பட்டம் பெற்று அரசாங்க சேவையிலீடுபட்டார். இங்கிலாந்து சென்று மேற்படிப்பு முடித்துத் திரும்பவும் அரசாங்க ஊழியம் புரிந்தனர். இணுவில் தேவையை நிறைவாக்க அரசாங்க சேவையை விட்டு வந்தனர்.

Dr. Curr இன் அடிச்சுவட்டில் கர்த்தருண்டாற்றி நாட்டுக்கும் ஆண்டவருக்கும் பணிபுரிந்தின்புறுவாராக. இறைபருள் இவருடனிருக்கப் பிரார்த்திக்கிறோம்.

### திரு. மகேந்திரன் மயில்வாகனம்

கடந்த ஞாயிற்றுக் கிழமை (12-5-68) நடைபெற்ற மூளாய் ஐக்கிய வைத்தியசாலை நிர்வாகிகள் தெரிவில், தெ. இ. சபையைச் சேர்ந்த திரு. ஏ. ஜே எம். மயில்வாகனம் வைத்தியசாலை ஆளுகைக் குழுவில் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் சுளிபுரம் கிராமசபை அங்கத்தவரும், மூளாய்ச்சபைச் செயலாளனும், சமூக ஊழியனுமாவர். இவருக்கு நம் பாராட்டு.

### திரு. எஸ், என். சுகுணானந்தன்

புங்குடுதீவுச் சபை ஊழியனாக நியமிக்கப்பட்டுள்ள திரு. எஸ். என். சுகுணானந்தனின் நியமனப் பிரதிஷ்டை ஆராதனை 26-5-68 மாலை புங்குடுதீவு ஆலயத்தில் நடைபெற இருப்பதாய்த் தெரிகிறது. இவர் மறைத்திரு என். சுப்பிரமணியத்தின் மகனுவர். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் B Sc பட்டம் பெற்றுக் கண்டி திரித்துவக் கல்லூரி ஆசிரியரானார். பின் இலங்கை மாணவர் கிறிஸ்தவ இயக்கப் பொதுச் செயலாளனாகப் பணிபுரிந்து, பின் பங்களூர் இறையியற் கல்லூரியிற் பயின்று திரும்பினர். தேவ ஒத்தாசை இவருடனிருப்பதாக.

## கண்பிரிவுக்கு உபகரணங்கள்

யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியிலுள்ள கண்நோய்ச்சிகிச்சைப் பகுதிக்கு விரைவில் ரூபா 3800 பெறுமதியான உபகரணங்கள் வந்து சேரவிருக்கின்றன.

இங்கு கண்நோயாளருக்குத் தகுந்த சிகிச்சையளிக்க இந்த உபகரணங்கள் தேவையெனப் பல காலம் தொடர்ந்து கோரப்பட்டு வந்ததை அடுத்தே இந்த உபகரணங்கள் இங்கு வந்து சேரவிருக்கின்றன.

யாழ். ஆஸ்பத்திரி கண் சிகிச்சைப் பகுதியில் இப்போதிருக்கும் படுக்கைகள் பற்றாக்குறையால் அதிக நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட முடியாதிருப்பதாகவும், இத்தேவையையும் நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிகிறது.

## 'ஹோப்' கப்பல் டாக்டர்கள், தாதிகள் யாழ்ப்பாணம் வருவார்கள்

'ஹோப்' டாக்டர்களும், தாதிகளும் யாழ்ப்பாண நோயாளர்களுக்குச் சிகிச்சையளிப்பார்கள்.

கொழும்பில் தங்கி நிற்கும் அமெரிக்க வைத்தியக் கப்பலான 'ஹோப்' பில் வந்த 3 டாக்டர்களும், 3 தாதிகளும் அடுத்த மாதப் பிற்பகுதியில் இங்கு வரவிருக்கிறார்கள்.

சத்திர சிகிச்சையிலும், வைத்திய சிகிச்சையிலும் விசேஷ தகைமைபெற்ற இந்த டாக்டர்களும், தாதிகளும் சுமார் ஒன்றரை மாதகாலம் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் சிகிச்சையளிப்பார்கள்.

யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் 9 பிரதம தாதிகளும், மாணவ தாதிகளும் 'ஹோப்' பிற் பயிற்சி பெறத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். அடுத்த மாதம் 20 ஆம் தேதி இவர்கள் 'ஹோப்' பில் பயிற்சி பெறச் செல்வார்கள்.

## புதிய நூல்நிலையம்

லங்கா சோவியத் நட்புறவுச் சங்க யாழ்ப்பாண பிரதேசக்கிளையினர் அடுத்த மாதம் யாழ்ப்பாணத்தில் அலுவலக மொன்றினை திறக்க விருக்கின்றனர். இங்கு ஒரு மத்திய நூல்நிலையமும் நிறுவப்பட விருக்கின்றது.

## பண்டார வன்னியன் ஓட்டுத் தொழிற்சாலை

சென்ற திங்கட்கிழமை (20-5-68) ஒட்டிசுட்டானில் பண்டார வன்னியன் ஓட்டுத் தொழிற்சாலை கைத்தொழில், கடற்றொழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அப்போது அவர், "தேசிய வீரன் ஒருவராகிய பண்டார வன்னியன் வாழ்ந்த மண்ணில் காலடி எடுத்து வைத்ததில் பெருமைப்படுகிறேன். அன்னிய ஏகாதிபத்தியவாதிகளை எதிர்த்து அடிபணியாது மூச்சு உள்ளவரை போராடித் தன் தாய்நாட்டுக்காக உயிர் விட்ட மாபெரும் வீரனான பண்டார வன்னியனின் நாமம் என்றும் மறையாது வழங்கவே இத் தொழிற்சாலைக்குப் 'பண்டார வன்னியன் ஓட்டுத்தொழிற்சாலை' யெனப் பெயரிட்டோம். நாட்டுக்குத் தேவையான ஓடுகளில் நாலிலொரு பாகம் இங்கு உற்பத்தி செய்யப்படும்" எனக் குறிப்பிட்டனர்.

## மன்னாரில் டின் மீன் தொழிற்சாலை

முதலாவது டின் மீன் தொழிற்சாலைக்கான அத்திபாரக் கல் நாட்டப் பட்டது. மன்னார், பேசாலையில் இந்தத் தொழிற்சாலைக்கான அத்திபாரக் கல்லை கைத்தொழில் மீன்பிடி அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன நாட்டினார்.

பத்து இலட்சம் ரூபாய் செலவில் உருவாக்கத் திட்டமிடப்பட்டிருக்கும் இந்த டின் மீன் தொழிற்சாலையின் வேலைகள் அடுத்த ஆண்டு முற்பகுதியில் முடிவடையுமென எதிர் பார்க்கப்படுகிறது.

இந்த டின் மீன் தொழிற்சாலை உருவாக்கப்பட்டபின் வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாக்கப்படும் தொகையைக் குறைத்து உள்ளூர்த் தேவைகளை ஓரளவு பூர்த்தியாக்கலாம் என அமைச்சர் கருதுகிறது.

## மேலும் புதியபொறுப்புக்கள்

யாழ்ப்பாண மேலதிக அரசாங்க அதிபருக்கும், உதவி அரசாங்க அதிபருக்கும் மேலும் பல புதிய பொறுப்புக்களை நிர்வகிக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளன.

மேலதிக அரசாங்க அதிபரின் நிர்வாகத்தின் கீழ்ச் சாதாரண பரிபாலனம், சமூகசேவைகள், கிராம முன்னேற்றம் சம்பந்தமான பொறுப்புகள் விடப்பட்டுள்ளன.

உதவி அரசாங்க அதிபரின் நிர்வாகத்தின் கீழ் உணவுமுத்திரை இயக்கம், நிலச் சுவீகரிப்புக்கள், அரசாங்க நிலங்களைக் குத்தகைக்கு விநியோகித்தல் ஆகிய பொறுப்புக்கள் விடப்பட்டுள்ளன.

## அங்கிளிக்கன் சபையினரின் அன்பளிப்பு

பல கிறிஸ்தவ சபைகளினரும் இவ்வருடம் செய்யும் கூட்டுப் பிரயாணத்தின்போது அங்கிளிக்கன் சபையினரின் சார்பில் பாப் ப[illegible] செய்ய முடிவு செய்திருக்கின்றனர்.

## பலதும் பத்தும்

பேற்றம்பா

'தேசத்திற்கு ஒன்றாக உலக நாடுகள் யாவற்றிலிருந்தும் ஒவ்வொரு மின்சாரக் கம்பங்களைச் சேகரிக்க ஒருவர் மூற்பட்டாராம். அவர் சேகரித்திருந்த அத்தனை மின்சார கம்பங்களுக்குள்ளும் யாழ்ப்பாணத்திலிருந்து போன மின் கம்பத்தைப் பிறிதொருவர் எளிதில் அடையாளம் காட்டினாராம்."

யாழ்ப்பாணத்தாரைக் கேலி பண்ணக் கூறப்படும் ஒரு சர்வ சாதாரணமான பகிடி இது. எமது மின்சாரக் கம்பங்களை அலங்கோலப்படுத்தும் சுண்ணாம்புப் பூச்சுத்தான் மேற் சொல்லப்பட்ட கேலிப்பேச்சிற்குக் கருப்பொருள்.

யாழ்ப்பாணத்து மக்களிடம் பொது நல உணர்வு, குடிநல மனப்பாங்கு மருந்துக்கும் கிடையாது என்று பிறர் சொல்லும் போது ஆத்திரம் அடைகிறோம். ஆராய்ந்து பார்த்தால் அக் கூற்றில் உண்மை இருப்பதை நாம் ஒப்புக் கொண்டுதான் ஆகவேண்டும்.

பொது இடங்களைச் சுத்தமாக வைத்திருப்பதில் அக்கறையற்ற சமுதாயமாக நாம் வாழுகிறோம். பொதுப் பொருள்களைக் காத்திரமாகப் பாவிப்பதிலும் குடிநல மனப்பான்மை எம்மிடம் சிறிதும் இருப்பதில்லை. வெற்றிலை மென்ற வாயினால் அழகிய யாழ். நகரின் தோற்றத்தை அலங்கோலப் படுத்துகிறோம். அது போலவே பொதுப் பாவிப்பிற்காக யாழ். மாநகரசபையார் வரியிறுப்பாளரின் செலவில் ஏற்படுத்தித் தந்திருக்கும் நிலையக் குழாய்களில் இருந்து குடிப்பதற்கான நீரைப் பல்வேறு வழிகளிலும் விரயமாக்குகின்றோம்; தெரு விளக்குகளைத் திருடிச் செல்கின்றோம அல்லது அவற்றை வேண்டுமென்றே சேதப்படுத்துகின்றோம்.

வீடுகளில் கட்டித் தீனி போட்டு வளர்க்கப்பட வேண்டிய கால் நடைகளை, நாய்களை மற்றவர்களுக்குச் சிரமத்தைக் கொடுக்கும் வகையிலும், வீதி விபத்துக்களுக்குக் காரணமாக இருக்கும் வகையிலும் கட்டாக்காலிகளாக வீதிகளில் அலைய விடுகிறோம்.

பஸ் வண்டிகளிலும், புகை வண்டியிலும் பெண்கள் கைக் குழந்தைகளுடன் இருக்க இடம் கிடைக்காது ஊஞ்சல் ஆடும் அதே வேளையில், கால் கை நீட்டி வசதியாக இருப்பதற்கும் படுப்பதற்கும் இடம் பிடித்துக்கொள்ளும் சுயநல மனப்பான்மை தமிழ்ச்சாதி தவிர்ந்த வேறு எந்தச் சாதியிடமும் இருக்க முடியாது:

வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தே நாகரிகத்தோடு வாழ்ந்தவன் தமிழன் என்று பெருமை பேசுகிறோம். பண்டைத் தமிழனின் பெருமைக்கு வாரிசுகள் நாம் என்று சொல்லும் தகுதி எமக்குஉண்டா என்பதை யாரும் சிந்திப்பது கிடையாது.

பண்டைய தமிழர் நாகரிகத்திற்கு எடுத்துக் காட்டாக விளங்கின மொகஞ்சதாரோ, மஞ்சு, ஹரப்பா போன்ற ஆதி கால நாகரிகங்கள். மேற்படி நாகரிகங்களை இன்றைய உலகே வியந்து பாராட்டுகின்றது. அன்றைய தமிழனின் சமுதாய அமைப்பை, அவனது வாழ்க்கை முறையை, அவனது வரலாற்றுப் புகழை, அவனது மொழியின் பெருமையை, கலாச்சாரத்தை மகாநாடுகள் கூடி ஆராயும் காலத்தில் நாம் வாழுகிறோம். எதிர்வரும் வருடத்தில் அகில உலக தமிழ் ஆராய்ச்சி மகாநாடு யாழ். நகரில் நடைபெறுமென இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பண்டைத் தமிழர் பெருமையை ஆராய்ந்து தாம் பெற்ற துணிவை ஆணித்தரமாக அறைந்து கூற அகில உலகிலும் இருந்து வரும் அறிஞர்கள் எமது யாழ். நகரில் கூட விருக்கிறார்கள். அப்படி யாழ். நகருக்கு வரும் அறிஞர் நம்மைக் குறித்து, நமது வாழ்க்கை முறை பற்றி, நமது பொதுநல உணர்வு - குடிநல மனப்பாங்கு பற்றி எந்த விதமான கருத்தை எடுத்துப் போவார்கள் என்பதையிட்டுச் சிறிது சிந்திக்க இக் குடிநல வாரம் பயன்பட வேண்டுமென அவாவுகிறோம்.

யாழ் நகரை அழகுள்ள நகரமாக மாற்றும் இவ் இயக்கம் எதிர் காலத்திலும் வருடா வருடம் கொண்டாடப்பட வேண்டும். அகில இலங்கைக்கும் பயன்படக் கூடியதாகக் குடிநல வாரத்தைக் கொண்டாட ஏற்பாடு செய்த சிறப்பு ஆணையாளர்களையும், அதற்கு ஆரம்ப ஆலோசனைகள் தெரிவித்த பெரியார்களையும் வாழ்த்துகிறோம்.

அது அவர்களது சற்பிரசாத திருவழிபாட்டு சடங்குகள் அடங்கிய பெரல் எழுத்துக்களால் எழுதப்பட்ட ஒரு நூலாகும். இப்பிரயாணிகளின் மூன்று [illegible] ரோமாபுரிக்கும் புனித நாட்டுக்குமாகும்.

கடிதம்

## வரவேற்க வேண்டியது

ஐயா,

யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள கள்ளு விற்பனை நிலையங்களுக்கு இனி, நம் பொலிசார் நிலைகொண்டு முற்றுகையிடுவார்கள் என்ற செய்தியைச் சென்ற (9-5-68) "ஈழநாடு" இதழில் கண்டு மிகவும் மகிழ்ச்சி யடைந்தோம். இத்தகைய ஓர் அரிய திட்டத்தை உறுதியுடன் செயற்படுத்த முனைந்துள்ள வடபகுதிப் பொலிஸ் அதிகாரி திரு. ஆர். சுந்தரலிங்கம் அவர்களை வாழ்த்துகின்றோம். இத்திட்டம் வெற்றிகரமாக நிறைவேற நாம் ஒவ்வொருவரும் இறைவனைப் பிரார்த்திப்பதுடன், வேண்டிய வேண்டிய உதவிகளை எல்லாம் வேண்டிய வேண்டிய நேரத்தில் உதவ ஆயத்தமாகவும் இருக்க வேண்டும். இன்று நாட்டில் நிலவும் அத்தனை குற்றச் சம்பவங்களுக்கும், ஒழுக்கக் கேடுகளுக்கும், சச்சரவுகள், குழப்பங்கள் உண்டாவதற்கும் இந்தக் குடிப்பழக்கமே காரணம் என்பதை நாம் ஒவ்வொருவரும் பகிரங்கமாக ஒப்புக் கொள்ள வேண்டும்.

இன்னும் நம் நாட்டில் தமிழ்ப் பணியும், சமயத்தொண்டும் ஆற்றவென அயராதுழைத்து வரும் கழகங்கள், மன்றங்கள், சபைகள் யாவும் இத்தருணத்தில் இணைந்து ஓரேகுரலில், நாடு முழுதும் மது ஒழிப்புச் சட்டம் அமுலுக்கு வர உறுதியுடன் ஓயாது உழைக்க வேண்டும். பழைய - பழகிய - வயது வந்த - குடிகாரருக்குப் பர்மிட் முறையில் குடிவகை பெறச் சட்டம் இயற்றலாம்; இது பற்றி ஆராய்வார்களா? இத்தகைய தூய தொண்டுகளைச் செய்ய முன்வரும் வண்ணம் பொதுநல சபைகள், அபிமானிகளைக் கேட்க வேண்டும். இத்தகைய பணிகளை விட்டு எந்த மகாநாடு நடத்தியென்ன? எவ்வளவு நற் பிரசங்கம் செய்தும் என்ன? ஒரு பயனையும் நம் சந்ததி பெற முடியாது. இக்காலக்கட்டத்தில் அறிவுள்ள ஒரு மனிதன் தான் பிறந்த நாட்டுக்கு ஏதும் பணி செய்ய வேண்டும் என்ற பரந்த நோக்குடன் உழைக்க விரும்புவானுயின் அது மது ஒழிப்பு வேலை ஒன்றே — எனத் துணிந்துகூறலாம். இறக்கப்படும் கள் முழுவதையும் கருப்பனீராக இறக்கி, கல்லாக்காரம், பனம் சீனி, பனங்கட்டி என்பன செய்தால், எவ்வளவு செல்வம் இங்கு பெருகும். எத்தனை பேருக்குத் தொழில் வாய்ப்புகள் ஏற்படும்! எம்மவர் எவ்வளவு சுகதேகிகளாக — சுறுசுறப்பானவர்களாக விளங்குவார்கள்? பொது சன நன்மை பேசும் தலைவர்களே! சன சமூக மன்றங்களே! ஆண்டு விழாக்கள் நடாத்து வதிலும், மேள தாளம் பிடித்து மந்திரிமாரையும், தலைவர்களையும் கூட்டி மாலைபோட்டுக் கூட்டம் போட்டது போதும்! எம்மினத்தின் எதிர்காலத்தைச்சிந்தை செய்யின்! அறிவைக் கெடுத்து, அழிவு செய்யும்மதுவை அகற்றத் திடசங்கற்பம் எடுங்கள்! குடிப்போருக்கு கார்ட்டு வழங்கப்பட வேண்டும். அவர்கள் நம் அரசாங்கத்துக்கு ஒரு சிறுவரியும் கட்ட வேண்டும். குடிப்பதற்கு வயதுக்கட்டுப்பாடும் வேண்டும்.

கா. இரகுநாதன்
நாவன்மார்கட்டு

## சூயஸ் கால்வாய் இனித் திறக்கப்பட மாட்டாது

இஸ்ரேலுக்கும் அராபியர்களுக்கும் ஏற்பட்ட யுத்தத்தின் விளைவால் சூயஸ் கால்வாய் 1967, ஜூன் மாதத்திலிருந்து அடைக்கப்பட்டது. அரபு நாடுகளும் இஸ்ரேல் நாடும் எந்தக் கப்பலும் அவ்வழியே செல்ல அனுமதிக்கவில்லை. அது மாத்திரமன்று, போரினால் ஏற்பட்ட அழிவினால் கப்பல் போக்குவரத்திற்கு ஏற்றதாய் அமையவில்லை, மேலும் போர் நடக்கும் முன் சூயஸ் கால்வாய் வழியாய்ச் சென்றுகொண்டிருந்த இதர நாடுகளின் பதினைந்து கப்பல்கள் எப்பக்கமும் போகாமல் தடுக்கப்பட்டு, கால்வாயில் காலதுவரை அடைபட்டு இருக்கின்றன. யுத்தத்தால் சூயஸ் கால்வாய்க்கு நேரிட்ட சேதத்தைத் திருத்தியமைத்து, செப்பனிட வேண்டுமென்றும், அங்கு அடைபட்டிருக்கும் 15 கப்பல்களையும் வெளியேற்றவும் எகிப்து நாடு வேலை ஆரம்பித்தது. இரண்டொரு நாளுக்குள் மீண்டும் இஸ்ரேலுக்கும் அரபியருக்கும் போர் மூண்டது. காரணம் என்ன வெனில், சூயஸ் கால்வாய் மீண்டும் போக்கு வரத்திற்குத் திறந்து விடப்பட்டால், இஸ்ரேல் நாட்டுக் கப்பல்களும் அவ்வழியாகச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் என்று இஸ்ரேல் நாடு கோரியதேயாம். அதற்கு அரபியர் ஒப்புக்கொள்ளாததால் போர் மூண்டது.

இந்த ஒரு புறமிருக்க, கடந்த பத்து மாதங்களாக அடைபட்டிருக்கும் கப்பல்களையாகிலும் வெளியேற்ற வேண்டும் என்னும் நோக்கத்துடன், ஐ.நா நாடுகளின் மேற்பார்வையுடன் கால்வாயைச் சுத்தம் செய்து திருத்த, கால்வாயின் வட பாகத்தில் வேலை தொடங்கினர். உடனே இஸ்ரேல் நாடு, அப்பணி தென்பாகத்தில் தான் நடக்க வேண்டும்: அடைபட்டிருக்கும் கப்பல்களைத் தென் பாகத்தின் வழியாகத்தான் வெளியேற்ற வேண்டுமென்று ஆட்சேபித்ததின்பேரில், வடபாகத்தில் ஆரம்பித்த வேலை நின்று போயிற்று. ஆட்சேபனைக்குக் காரணம்: ருஷ்யாவின் பலத்த கடல்படையின் ஒரு பாகம் சூயஸ் கால்வாயின் வட பாகத்தினருகில் மத்தியதரைக் கடலில் போருக்குத் தயாராக நிற்கின்றது. சூயஸ் கால்வாயில் அடைபட்டிருக்கும் 15 கப்பல்கள் வெளியேறினதும், ருஷ்யாவின் பலத்த கப்பற் படை, அரபு நாடுகளுக்கு உதவியாக இஸ்ரேல் நாட்டை அதம் செய்யும் நோக்கத்துடன் சூயஸ் கால்வாயில் நிறுத்தப்படலாம். அரபியர்களும் இப்போது பெரும் போருக்குத் தங்களை ஆயத்தம் செய்து கொண்டு வருகிறார்கள். இதற்கு யூதர்களும் ஆயத்தமாகி விட்டார்கள், சிறு சிறு சண்டைகள் சில நாட்களாக நடந்து கொண்டே வருகிறது. இது பெரும் போராக மூளும் எனபதற்கு ஐயமில்லை. இப்போது இஸ்ரேல் நாடு முன்னைவிடப் பன்மடங்கு தன்னை மிக்க சிறப்புறச் செய்து கொண்டுள்ளது.

"எருசலேமின் சமாதானத்துக்காக வேண்டிக் கொள்ளுங்கள். உன்னை நேசிக்கிறவர்கள் சுகித்திருப்பார்களாக."

## யூத ஜெபாலயத்தின் 400 ஆம் ஆண்டு விழா

கொச்சியில் வாழும் யூதர்கள் தங்கள் ஜெபாலயத்தின் 400 ஆம் ஆண்டு விழாவை மிக்க உன்னத நிலையில் கொண்டாடத் திட்டமிட்டுள்ளனர். இந்திய நாட்டில் உள்ள மிகப் பழைய யூத ஜெபாலயம் இது ஒன்றே. இது 1567 ஆம் ஆண்டு கேரள மன்னனின் ஆதரவில் கட்டப்பட்டதாகும். தற்காலத்தில் கேரள நாட்டிற்கு வருகை தரும் அயல் நாட்டினர் இதைப் பார்க்காமல் போகமாட்டார்கள். இது இவ்வாண்டு டிசம்பர் மாசம் நடைபெறும். இதற்குத் தலைமை தாங்குமாறு பிரதமர் இந்திரா காந்தி அழைக்கப்பட்டுள்ளார்.

இதையொட்டிப் பல பல நிகழ்ச்சிகள் நடத்தப்படும். பொருட்காட்சி ஒன்றும் நிறுவப்படும். 1470 ஆம் ஆண்டு அச்சவாகனம் ஏறிய மிகப் பழைய புத்தகம் பொருட்காட்சியில் இடம் பெறும். இவ்விழாவுக்கு அயல் நாடுகளிலிருந்து பல கலைகளில் தேர்ச்சி பெற்றவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். 1968 ஆம் ஆண்டு யூதர்களின் பிரயாண ஆண்டாகக் கருதும்படியும், இதையொட்டி ஒரு தபால் தலை பில்லையும் (Stamp) வெளியிடுமாறு இந்திய அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

உண்மைச்சுடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயதாரகை
UTHAYATHARAKAI

1968 ஆம் ஆண்டு மே மீ 24 ஆம் நாள்

# மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசிப் பயனில்லை

பழம் பெருமை வாய்ந்த யாழ்ப்பாண நகரைப் புதுப் பொலிவுடன் விளங்கச் செய்வதற்கு முயற்சிகள் பல நடக்கவிருக்கின்றன. நவீன அங்காடி, நவீன பேருந்து நிலையம் ஆகியன தோற்றவிருக்கின்றன. நகர்ப்பூங்கா, நூல்நிலையம், கலைமண்டபம் ஆகியன பொலிவுடன் விளங்குகின்றன. வீதிகளும் புனரமைப்படைகின்றன. நகரை அழகுபடுத்த என்னென்ன வெல்லாமோ செய்யப்படுகின்றன.

இம் முயற்சிகளெல்லாம் அவமாகின்றன மக்கள் செயலால். பொதுச் சொத்துக்கள் அபாவனை செய்யப்படுகின்றன. கேட்பாரற்றமுறையில் அசுசிப்படுத்தப்படுகின்றன. மக்களிடையே பொறுப்புணர்ச்சியைக் காணோம. உந்தி ஆசனங்கள் நாசமடைகின்றன. பொது நிலையங்கள் எச்சிக்கும் குப்பைக்கும் இலக்காகின்றன. சுவர்களும் தூண்களும் சுவரொட்டிகளின் மேடைகளாகின்றன. வீதியோரங்கள், சாக்கடைகளைப்பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை.

தமிழரின் நாகரிகமும், ஆசாரமும், புனிதமும் மேடையெங்கும் சிலாகிக்கப்பட்டபோதும வெளியே அவற்றைக் காண்பது துர்லபம். குப்பைப் பிறப்புகளோ வெனக் கண்டவர் கூறத்தக்கதாய்க் காட்சியளிக்கிறது நகரம். மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசிப் பயனில்லையென்றார் பாரதியார். செயலில் ஈடுபடுவதே இன்று நம் தேவையாகியுள்ளது.

இதை உணர்ந்த யாழ்ப்பாண மாநகரசபை 27-5-68 முதல் 2-6-68 வரை "குடிநல — சுகாதார வாரம்" கொண்டாட இருக்கிறது. மக்களிடையே பொறுப்புணர்ச்சியும் அழகுணர்வும் சுகாதாரப்பழக்கமும் உண்டாக்க இவ்வாரம் பெரிதும் பயன்படலாம். வீதிகளைச் சுத்தஞ் செய்தல், சுவரொட்டிகளை அகற்றல், குடிநல — சுகாதார சம்பந்தமான துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தல், அத்தியாவசிய சுத்திகரிப்பு வேலைகள் இவ்வாரத்தில் இடம்பெறும். இவை சிரமதான முறையில் நடைபெற இருக்கின்றன. பாடசாலைகளின் ஒத்துழைப்புக் கோரப்பட்டுள்ளது. பொதுக் கட்டிடங்கள் எங்கும் தேசீயக் கொடிகள் பறக்கும். மின் வெளிச்ச அலங்காரங்கள் நகரக் கட்டிடங்களை அலங்கரிக்க விருக்கின்றன.

இம்முயற்சியில் பொது மக்கள் சிரத்தை கொண்டு ஒத்துழைத்து, நகரத்தை அழகுபடுத்தி, ஒழுங்கும் பண்பும் உள்ளவர்களாக நடந்து யாழ்ப்பாணநகரின் பெருமையைப் பேணிப் பெருமையடையமுன்வருவார்களென நம்புகிறோம். இம்முயற்சியை ஆரம்பித்த மாநகரசபை ஆணையாளர் பாராட்டுக்குரியவர்கள். அவர்கள் முயற்சி அநுகூலமடைய வேண்டுமெனில் பொதுமக்கள் ஒத்துழைப்பே முக்கியம். நம் நகரைச் சுத்தமாக வைப்பதில், நம் பண்பை வளர்ப்பதில், நம் பெருமை காப்பதில், நம் சுக வாழ்வில் யாருக்குத்தான் அக்கறையில்லாமற்போகும்.

இவ்வார சம்பந்தமாய் வெளியாகவிருக்கும் சிறப்பு மலருக்கெனப் பிரதமரும் பிறரும் தந்துள்ள செய்திகளைக் கீழே காண்க.

**கௌரவ பிரதமமந்திரியவர்களின் செய்தி,**

இலங்கை,
கொழும்பு, 27-5-68

குடியியல் பொறுப்புக்களைக் குடிமக்களுக்கு உணர்த்தும்பொருட்டு, 27-5-68 இல் இருந்து 2-6-68 வரை யாழ்ப்பாண மாநகரசபை "குடிநல — சுகாதார வார"த்தைக் கொண்டாடுவதை அறிய மகிழ்ச்சி அடைகிறேன். பயன்தரக்கூடிய ஓர் அரியமுயற்சி இது. இதனால் ஏற்படும் விளைவுகள் நலன் பயப்பனவாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இம் முயற்சியில் யாழ்ப்பாண மாநகரசபை வெற்றிபெற வேண்டுமென வாழ்த்துகிறேன்.

ஒப்பம். டட்லி சேனநாயக்கா

○

**கௌரவ உள்ளூராட்சி அமைச்சர் அவர்களின் செய்தி**

இலங்கையில் இருக்கக்கூடிய அத்தனை உள்ளூராட்சி மன்றங்களுக்கும் முன்னோடியாக யாழ்ப்பாண மாநகரசபை, "குடிநல—சுகாதார வாரத்தை" பெரிய அளவில் வெகு விரிவாகக் கொண்டாட முன்வந்திருப்பது பாராட்டப்பட வேண்டியதே. ஏனையபிற உள்ளூராட்சி மன்றங்களும், யாழ்ப்பாணம் காட்டும் பாதையில் அடியெடுத்து முன்னேறுவது யாழ்ப்பாணத்தில் மேற்படி குடிநல வாரம் சிறப்பாகக் கொண்டாடுவதில் தங்கியிருக்கிறது.

முன்பும் ஏனைய உள்ளூராட்சி மன்றங்களை முந்திக் கொண்டு "சுகாதார ஒலி" என்னும் சுகாதார ஏட்டை யாழ்ப்பாண மாநகரசபை வெளியிட்டு, தொடர்ந்து நடத்தி வருவது நீங்களறிந்ததே.

மக்களிடம் பொதுநல உணர்வை வளர்க்கும்பொருட்டு, சுகாதாரத்தையும் இணைத்துக் கொண்டாடப்படும் இக் குடிநல-சுகாதார வார விழா பொது மக்களது மனப்போக்கில் பெரும் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதில் ஒரு திருப்பு முனையாக அமையும் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

